**நாமக்கல் வணிகவரி மாவட்ட துணை ஆணையர்(மாவ)(முகூ பொ) அவர்களின் செயல்முறைகள்**

**பிறப்பிப்பவர்: திரு.வே.செல்வகுமார், B.Com.,**

**செ.மு.ந.க.3657/2017/அ1** NOV 2018 **நாள்: 15.10.2018**

பொருள்: பொதுப்பணிகள் - வணிகவரித்துறை - நாமக்கல் வணிகவரி மாவட்டம் - தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் மூலம் 2015-2016ம் ஆண்டுக்கான தொகுதி - IVல் அடங்கிய தட்டச்சர்கள் பட்டியல் வரப்பெற்றது - பணியேற்பு ஆணை வழங்கியது - பணியில் சேர்ந்து கொண்டது - பணிவரன் முறை செய்தும் தகுதிகாண் பருவம் துவக்கி ஆணை வழங்குதல் - தொடர்பாக.

பார்வை:
1. செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை-6 அவர்களின் கடிதம் எண்: 5655/பி.எஸ்.டி-அ2/2017, நாள்: 22.09.2017.
2. இணை ஆணையர் (மா.வ.), சேலம் கோட்டம், சேலம் அவர்களின் செ.மு.ந.க.4968/2017/அ2, நாள்:12.10.2017.
3. இவ்வலுவலக செ.மு.ந.க.3656/2017/அ1, நாள்: 26.10.2017.

***

**ஆணை:**

பார்வை 1ல் காணும் கடிதத்தின்படி தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் 2015-2016ம் ஆண்டிற்கான தொகுதி-IV ல் அடங்கிய தேர்வின் மூலம் தெரிவு செய்து பார்வை 2-ல் காணும் இணை ஆணையர் (மா.வ), சேலம் கோட்டம், சேலம் அவர்களின் செயல்முறை ஆணைகளின் படி இவ்வணிகவரி மாவட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு பார்வை-3ல் காணும் இவ்வலுவலக செயல்முறை ஆணைகளின் படி பணி நியமனம் வழங்கப்பட்டு பணியில் சேர்ந்து கொண்டுள்ள தட்டச்சர்களுக்கு கீழ்க்கண்டுள்ளவாறு பணிவரன்முறை செய்தும் தகுதி காண் பருவம் துவக்கியும் ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

| வ. எண் | பணியாளர்களின் பெயர் மற்றும் பதவி (திருவா.) | தற்போது பணிபுரியும் அலுவலகம் | பணியில் சேர்ந்து கொண்ட நாள் | பணி வரன் முறை செய்து தகுதி காண் பருவம் துவக்கப்பட்ட நாள் |
|---|---|---|---|---|
| 1. | ஆர். மஞ்சு, தட்டச்சர் | உதவி ஆணையர் (மா.வ), நாமக்கல் (நகர்) | 01.11.2017 முற்பகல் | 01.11.2017 முற்பகல் |
| 2. | எல். லலிதா, தட்டச்சர். | உதவி ஆணையர் (மா.வ), நாமக்கல் (ஊரகம்) | 01.11.2017 முற்பகல் | 01.11.2017 முற்பகல் |
| 3. | பி.கார்த்திகேயன், தட்டச்சர் | உதவி ஆணையர் (மா.வ), சங்ககிரி | 01.11.2017 முற்பகல் | 01.11.2017 முற்பகல் |
| 4. | ஆர்.புவனேஸ்வரி, தட்டச்சர். | மாநில வரி அலுவலர் ஆத்தூர் (ஊரகம்) | 01.11.2017 முற்பகல் | 01.11.2017 முற்பகல் |
| 5. | வி.ரேஷ்மாபேகம் தட்டச்சர். | துணை ஆணையர் (மா.வ), நாமக்கல் | 01.11.2017 முற்பகல் | 01.11.2017 முற்பகல் |

Scanned by CamScanner

1. இப்பணியாளர்கள் தொடர்ச்சியான மூன்றாண்டு பணிக்காலத்தில் இரண்டாண்டுகள் தகுதிகாண் பருவத்தினை பூர்த்தி செய்திடல் வேண்டும்.
2. இப்பணியாளர்கள் துறைத் தேர்வான மாவட்ட அலுவலக நடைமுறை நூல் மற்றும் தமிழக அரசின் தொழிற்கல்வித்துறை நடத்தும் கணினி பயிற்சியில் (Certificate Course in Computer on Office Automation) தேர்ச்சி பெறுவதுடன், தட்டச்சர் பணிநிலையில் தட்டச்சு பணிகளுக்கு குந்தகம் ஏற்படாவண்ணம் ஓராண்டு கால இளநிலை உதவியாளர் பயிற்சியினையும் நிறைவு செய்தல் வேண்டும்.

துணை ஆணையர்(மா.வ)(முகூபொ),
நாமக்கல்.

பெறுநர்:
உரிய பணியாளர்கள்.
(தலைமை அலுவலர் மூலமாக)

நகல்:
1) இணை ஆணையர்(மாவ), சேலம் கோட்டம், சேலம் அவர்களுக்கு தகவலின் பொருட்டு பணிந்தனுப்பப்படுகிறது.
2) உதவி ஆணையர்கள்(மாவ), நாமக்கல்(நகர்), நாமக்கல்(ஊரகம்), சங்ககிரி, மற்றும் மாநிலவரி அலுவலர், ஆத்தூர்(ஊரகம்).
(பணியாளர்களின் பணிப்பதிவேட்டில் உரிய பதிவுகள் மேற்கொள்ளும் பொருட்டு)

B2

Scanned by CamScanner